வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான நிதிக்கூற்றுக்கள் 2025 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதுகின்ற கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு சபை பொறுப்பாக உள்ளது.

### 1.2 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தால் 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் 2026 மார்ச் 20 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக 2025 நவம்பர் 13 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருந்த வரைவு நிதிக்கூற்றுக்களுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை கிடைத்த பின்னர் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>மேலும் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு உரிய தரவுகள் கணக்குகள் தயாரிப்பதற்கு உரிய மென்பொருளில் உள்ளடக்கப்படுகின்றது. அந்த தரவுகள் உள்ளடக்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் 2026 பெப்ரவரி 16 ஆந் திகதி கணக்காய்வாளர் | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்தம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தலைமை அதிபதிக்கு கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>அதன் பின்னர் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வரைவு நிதிக்கூற்றுக்கள் முறையே 2026 மே 15, 2026 யூலை 30 மற்றும் 2026 ஒக்தோபர் 15 ஆம் திகதிகளின் போது பூர்த்தி செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்கள் ரூபா 565 மில்லியன் தொகையும், பொறுப்புக்கள் ரூபா 1,670 மில்லியன் தொகையும், உரிமை மூலதனம் ரூபா (1,105) மில்லியன் தொகையும், வருமானம் ரூபா 746 மில்லியன் தொகையும் மற்றும் செலவினம் ரூபா (304) மில்லியன் தொகையும் ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கம்பனியின் சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கும், பொறுப்புக்களை தீர்த்து நிதிக் கிரயத்தை குறைத்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் முகாமைத்துவ செயற்பாடுகள் திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) கம்பனி 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கம்பனியின் தேறிய இலாப விகிதம் (-17) முதல் (-21) வரை குறைவடைந்துள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கம்பனியின் இலாப விகிதத்தை படிப்படியாக அதிகரிப்பதற்கான உபாய வழிகளை கட்டியொழுப்புவதற்காக முகாமைத்துவம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமான | ஏற்றுக்கொள்கின்றோம். | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக |

| | | |
|---|---|---|
| பெறவேண்டிய பணம் ரூபா 82.32 மில்லியனும், செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 94.81 மில்லியனும் ஆகும். | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.1 நீண்டகால மற்றும் குறுங்காலக் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொழிற்படு மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கம்பனியினால் ரூபா 150 மில்லியன் குறுங்கால கடன் தொகை ஒன்று 2017 மார்ச் 02 ஆம் திகதி முதல் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 03 சந்தர்ப்பங்களின் போது மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்தது. கடன் தொகை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு புறம்பாக செலவினங்களைச் செய்தமையின் காரணமாக இந்தக் கடன் தொகை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்ததடன் 2025 மே 31 இல் உள்ளவாறு அட்டுறு வட்டியுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 264.10 மில்லியன் ஆக இருந்தது. 2022 பெப்ரவரி 18 ஆந் திகதி முதல் மாதம் ஒன்றுக்கு ரூபா 0.5 மில்லியன் வீதம் செலுத்துவதற்கு கம்பனி இணங்கி இருந்த போதும் அந்த கடன் அளவின் பிரகாரம் போதிய கடன் அளவின் பிரகாரம் போதியளவில் இல்லாமையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய மீண்டும் செலுத்தும் திட்டம் ஒன்று 2022 திசெம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறும் 2022 திசெம்பர் 02 ஆம் திகதிய கடிதம் மூலம் மக்கள் வங்கியின் உதவி பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியால் அவ்வாறான திட்டம் ஒன்று வழங்கப்படாது இருந்ததுடன் மாதம் ஒன்றுக்கு ரூபா 0.5 மில்லியன் வீதம் செலுத்தப்பட்டிருந்தது. | நிதி நிலைமை நெருக்கடியானதன் அடிப்படையில் கொடுப்பனவு திட்டம் ஒன்று இதுவரை வழங்கப்படவில்லை. 2022 சனவரி 28 ஆம் திகதி முதல் 2025 மே 26 ஆம் திகதி வரை மாதாந்தம் ரூபா 0.5 மில்லியன் வீதம் தவணையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2025 மே மாதம் வரையில் ரூபா 20 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | பெறப்பட்ட கடன் தொகை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்த வேண்டி இருந்ததுடன் கடனை மீளச் செலுத்துதல் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) தற்போதைய நிதிக் கஸ்டங்களை வெற்றிகொண்டு விரைவாக வளர்ந்துவரும் நிர்மாண கைத்தொழிலை வலுப்படுத்தும் தரப்பினராக உட்படுவதற்கு கம்பனிக்கு இயலுமான வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் | ரூபா 500 மில்லியன் கடன் தொகை தொடர்பாக 2025 ஒக்தோபர் 02 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் கடன் தொகை ரூபா 500 மில்லியன் மற்றும் வட்டித் | பெறப்பட்ட கடன் தொகையை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்த வேண்டி இருந்ததுடன் கடனை மீள செலுத்துவதற்காக |

| | | |
|---|---|---|
| 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்துடன் மக்கள் வங்கியால் ரூபா 500 மில்லியன் கடன் தொகை 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் இலங்கை வங்கியில் அறவிடுவதற்கு இருந்த ரூபா 199.05 மில்லியன் தொகை குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட மிகுதித் தொகையான ரூபா 301.38 மில்லியன் தொகையில் 21 சதவீதம் மாத்திரமான தொகை அதாவது ரூபா 105.98 மில்லியன் கடன் பெற்றுக் கொள்ளப்பட்ட நோக்கத்திற்கு முரணான செலவினம் ஆன ஊழியர் சம்பளத்தை உள்ளடக்கிய நிர்வாக செலவினம், மேலதிகப் பற்று தீர்த்தல், வங்கிக் கட்டணங்களை செலுத்துதல் மற்றும் கடன் வட்டி செலவினங்களுக்காக 2018, 2019 ஆம் ஆண்டுகளின் போது செலவிடப்பட்டிருந்தது. இந்த ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் 2025 ஒக்டோபர் 02 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வட்டித் தொகை ரூபா 426.31 மில்லியன் ஆகும். அவ்வாறே 05 வருட சலுகைக் காலம் 2023 ஒக்தோபர் 23 ஆந் திகதி முடிவடைந்ததுடன் அதன் பின்னர் கடன் தொகையில் மூலதன பங்கு குறித்துரைத்த பிரகாரம் செலுத்த வேண்டியிருந்த போதும் கடனை மீளச் செலுத்துவதற்கோ அல்லது அது தொடர்பாக கொடுப்பனவுத் திட்டமென்றோ சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | தொகை ரூபா 426.31 மில்லியன் ஆகும்.<br><br>இது தொடர்பாக 2025 மே 15 ஆம் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் படி 05 வருடங்கள் புதிய தொழில் முயற்சித் திட்டம் ஒன்று தயாரித்து அந்த திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின் கடன் பணத்தை செலுத்துவதற்கு நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்து நிதியீட்டம் செய்து கொள்வதற்கு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய திட்டம் ஒன்று தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |

**2.2.2 பொருட்கள் கொள்வனவு செய்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 30 ஆந் திகதி இலக்கம் 296/4/a என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக 05 உத்தியோகத்தர்கள் வீதம் உள்ளடக்கிய 02 குழுக்கள் நியமிக்கப்பட்டு பெறுகைத் தீர்மானம் எடுப்பதற்காக 2022 திசெம்பர் 02 ஆம் திகதி இலக்கம் கொதச/சபா/அமா.கா/சீடி 22 என்ற கடிதம் அரசாங்க கணக்குகள் | தற்போது வரிசை அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் படி பெறுகைக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. 2023 மார்ச் 01 ஆந் திகதிய இலக்கம் PDF/PMD/Clari/2023/UD & H/03 என்ற கடிதத்தின் மூலம் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் அதற்குரிய மேலதிகங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இலக்கம் சீஏஈ/ஏ/பீஎம்சீ/ரீஆர்/2022/01 என்ற கணக்காய்வு ஐயவினாவின் மூலமும் இது தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் மேலும் பெறுகை நடவடிக்கைகள் அந்த சட்ட ரீதியற்ற குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (அ) மற்றும் 2.8.4 இன் பிரகாரம் பெறுகைகளின் விடயங்களுக்கு உரிய நிபுணர்களின் மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் சகல பெறுகைகளுக்காகவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பெறுகைத் தீர்மானங்களை எடுப்பதற்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் படி பெறுகை நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் படி சகல அரச நிறுவனங்களும் பெறுகை அலகு ஒன்றாக தேசிய இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனி உரிய ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஆலோசனையின் படி தேசிய இலத்திரனியல் பெறுகை முறைமையில் பதிவு செய்து பெறுகை நடவடிக்கைகள் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (இ) பந்தியின் பிரகாரம் பெறுகை நிறுவனம் ஒன்றின் தலைவரால் நியமிக்கப்படுகின்ற ஆகக் குறைந்த அங்கத்தவர்கள் மூன்று பேரை உள்ளடக்கிய குழு ஒன்றின் ஊடாக வழங்குனர்களை மதிப்பீடு செய்து வழங்குனர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் | 2026 ஆம் ஆண்டிற்கு வழங்குனர்கள் பதிவு செய்து போது பெறுகைக் கைநூலின் 3.4.3 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் பணிக் கோவையின் 3.4.3 (இ) பந்தியின் பிரகாரம் வழங்குனர்களை பதிவு செய்து அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை முறைமைப்படுத்துல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறான திட்ட முறைமை ஒன்று பின்பற்றப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | | |
| (உ) | 2025 சனவரி 27 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து 2025 ஆம் ஆண்டிற்கு வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023/2024 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்த வழங்குனர்களும் பின்னர் சந்தர்ப்பங்களில் மீண்டும் பதிவு செய்து அவர்களிடம் இருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இந்த வழங்குனர்களின் பதிவு வரையறுக்கப்பட்டிருந்த மையினால் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் நோக்காகக் கொண்டு நீண்ட காலமாக நிறுவனத்திற்கு வழங்கலை மேற்கொண்ட முன்னர் பதிவு செய்திருந்த வழங்குனர்களின் பதிவைப் புதுப்பித்து மீண்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | வழங்குனர்களைப் பதிவு செய்தல் சரியான திட்ட முறைமையின் படி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கம்பனி ஒன்று வாகன தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக கிரவல் மண் கியூப் 6,000 மற்றும் ஏபீசீ கலவை வழங்குவதற்கு வழங்குனர்களை தெரிவு செய்வதற்குரிய பெறுகை குழு தீர்மானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த வழங்குனர் பதிவு செய்து இருந்த கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னராக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. மேலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மேலதிகம் 35 இன் படி பெறுகை பெறுமதியின் அடிப்படையில் பெறுகை முறைமை தெரிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் முதலாவது கிடைத்த மண் கியூப் 6,000 வழங்குதல் 07 கட்டங்களின் ஊடாகவும் 2,120 கியூப் வழங்குதல் இரண்டாவது கட்டளை 03 கட்டங்களாகவும் சிறிய பகுதிகளாக பிரித்து சிறிய பெறுகைக் குழு தீர்மானத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த பெறுகைப் பெறுமதியும் மதிப்பீடு செய்து பெறுகை அதிகார | பெறுகைக் குழு தீர்மானத்தைப் பெற்றுக் கொள்ளல் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரர்களின் ஆரம்ப மண் மாதிரி அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் பெறுகை குழு அறிக்கை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளவதற்காக.<br><br>ஆரம்ப கொள்வனவு கட்டளை கியூப் 6,000 இற்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளரின் தேவையின் அடிப்படையில் 6,000 கியூப் இற்காக கொள்வனவுகள் 07 கட்டளைகளின் ஊடாகவும் இரண்டாவது கட்டத்திற்காக 03 கட்டளைகள் ஊடாகவும் வழங்குனரிடம் இருந்து மண் பெறப்பட்டுள்ளது.<br><br>பல சந்தர்ப்பங்களின் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அறிக்கை வழங்கப்பட்டதுடன் இந்த மண் டைப் 01 கிரவல் மண்ணாக இருந்தமை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நிதி எல்லையின் கீழ் மொத்த தேவையை மதிப்பீடு செய்து பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமித்து அதன் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். உரிய தர பரிசோதனையும் சரியாக காலரீதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எல்லையின் படி உரிய பெறுகைக் குழுவின் மூலம் தீர்மானத்தை பெற்று கூறுவிலை கோரப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் 12 சந்தர்ப்பங்களின் போது கிரவல் மண் 8,870 கியூப் மற்றும் ஏ.பீ.சீ கலவை கியூப் 630 வழங்குவதற்காக ரூபா 93.26 மில்லியன் தொகை வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. வழங்குனரின் மூலம் பெறப்பட்ட மண்ணின் தர பரிசோதனை அறிக்கை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மண் வழங்கல் மேற்கொள்ளப்பட்டமையால் நியமத்தை உடைய டைப் 01 வகையின் கிரவல் மண் வழங்கப்பட்டிருந்தமையை கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாது இருந்தது. | பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தின் தொழில் நுட்ப குழுவும் இதற்கு முன்னர் நியமிக்கப்படாது இருந்ததை ஏற்றுக் கொள்வதுடன் தற்போது 2025 ஆம் ஆண்டிற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட பெறுகைகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (இ) இன் பிரகாரம் பதிவு செய்த வழங்குனரிடம் இருந்து கொள்வனவு மேற்கொள்ளும் போது பெறுகை நிறுவனத்தால் பதிவு செய்த பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் தெரிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் பெறுகைகளுக்காக கவனத்தில் கொள்ளப்பட்ட 08 வழங்குனர்களில் மூன்று பேர் கம்பனியில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | 05 வழங்குனர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தமையால் முன்னைய ஆண்டுகளின் போது நிறுவனத்தில் பதிவு செய்திருந்த வழங்குனர்கள் ஊடாகவும் இந்த கட்டளைக்காக கூறுவிலை கோரப்பட்டிருந்தது. | வழங்குனர்களை பதிவு செய்து கொள்ளுதல் முறையாக மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அதன் பிரகாரம் நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனி பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த நிறுவனம் ஒன்றாக இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பெறுகைகளுக்கு உரிய மண் விற்பனையின் போது TAX Invoice இற்குப் பதிலாக Seals Invoice விநியோகிக்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த விற்பனைப் பெறுமதி ரூபா 95.13 மில்லியனுக்காக உள்நாட்டு | இது வரை இது தொடர்பாக நிறுவனத் திட்ட முறைமையின் ஊடாக நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களுக்காக வட் குறிப்பிடப்பட்ட பட்டியல் மாத்திரம் பெறப்படுமாயின் அதற்குரிய விடயங்கள் பட்டியல் இடும் போது மாத்திரம் அதற்காக வட் இன்வொயிஸ் விநியோகிக்கப்படுகின்றது. | வட் இற்காக பதிவு செய்த நிறுவனத்திற்கு பொருட்களைவ ிற்பனை செய்யும் போது TAX Invoice விநியோகித்து வட் வரி அறவிடுவதற்கும் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டி இருந்ததாக காணப்பட்ட வட் வரி பெறுமதி ரூபா 17.12 மில்லியன் ஆக காணப்பட்டது. | இந்த வழங்கல்களுக்காகவும் அந்த முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் நோக்கங்களுக்கு முரணாக ஆண்டின் போது ரூபா 2.94 மில்லியன் ஆன கட்டிட பொருட்கள் அல்லாத பொருட்கள் இடைத்தரப்பினர் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டு அரசாங்க நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கம்பனி நோக்கங்களுக்கு உரிய செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் அமுல்படுத்தல் வேண்டும். |
| (உ) | இலக்கம் 2004/TR/249 மற்றும் 2024/TR/372 என்ற கொள்வனவுக் கட்டளை மூலம் குறைந்த விலை சமர்ப்பித்து இருந்த கம்பனிக்கு பதிலாக கடன் அடிப்படையில் அதிக விலையின் கீழ் பொருட்கள் வழங்குகின்ற நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் கம்பனிக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டு இருந்தது. | நிறுவனத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக 2004/TR/249 என்ற கட்டளைக்காகவும் 2024/TR/372 என்ற கட்டளைக்காகவும் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்குப் பதிலாக ஆரம்ப ரீதியில் ஆகக் குறைந்த விலைக்கு மேலதிகமாக கடன் அடிப்படையில் வழங்குதல், கடன் கால எல்லை, போக்குவரத்து வசதிகள் வழங்குதல் போன்ற சகல விடயங்களையும் கவனத்தில் கொண்டு பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு மிகவும் நலன் வாய்ந்த வகையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் படி வழங்குனர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | வழங்குனர்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பட்டியல் பத்திரம், பொருட்கள் பெறுவனவுப் பத்திரம், விலை கொள்வனவு, கட்டளை யாவும் பரீட்சிக்கப்பட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்து பரீட்சிக்கப்பட்டு பணம் செலுத்துவதற்காக அங்கீகாரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது கம்பனியால் அதற்கு முரணாக பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கு முன் கொள்வனவு கட்டளை உடன் நிதி ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தால் நாளாந்த வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக கொள்வனவு கட்டளை செலுத்தப்பட்டுள்ளது. வங்கி பிணை முறியைப் பெற்று கொள்வதற்கு முடியாமையினாலும், கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட பொருட்களுக்காகவும் வழங்குனர்களுக்கு தொடர்ந்தும் நிதி செலுத்துதல் போன்ற விடயங்களின் காரணமாகவும் கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்குவதற்கு முடியாது இருந்தது. | கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் போது பொருட்கள் கிடைத்திருந்தமையை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 2.2.4 பொருட்கள் விற்பனை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் விற்பனை வருமானம் ரூபா 261.60 மில்லியன் ஆக இருந்ததுடன் விற்பனைப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி விற்பனை வரமானம் ரூபா 254.36 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் இந்த இரண்டு பிரிவுகளுக்கு இடையே விற்பனை வருமானத்தில் ரூபா 7.24 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | விற்பனைப் பிரிவில் இருந்து கிடைத்த விற்பனைத் தரவுகள் மற்றும் நிதிப் பிரிவில் கணக்கீடு செய்யப்பட்ட விற்பனைத் தரவுகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய இணக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | சரியான விற்பனை வருமானத்தை கணிப்பிட்டு எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்தல் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | விற்பனை பிரிவின் அறிக்கையின் பிரகாரம் 15 விற்பனை நிலையங்களில் 2023 ஆம் ஆண்டின் விற்பனை வருமானமான ரூபா 357.65 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் ரூபா 114.06 மில்லியன் ஆக இருந்ததுடன் வருமானம் குறைவடைதல் ரூபா 243.58 மில்லியன் ஆக இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | வருமானம் குறைவடைவற்குரிய காரணங்களை இனங்கண்டு விற்பனை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 விற்பனை நிலையங்களை நட்ட நிலைமையில் நடாத்திச் செல்லல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டில் கம்பனியின் விற்பனை நிலையங்களுக்கு உரிய மாதாந்த கணக்கு அறிக்கைகள் தயாரிக்காமையின் காரணமாக ஒவ்வொரு விற்பனை நிலையத்திலும் இலாப நட்டங்களை இனங்காண்பதற்கு முடியாது இருந்ததுடன் 2025 சனவரி முதல் யூன் 30 ஆந் திகதி வரை மாதத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 17 விற்பனை நிலையங்கள் நட்டத்தை பெற்று இருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | விற்பனை நிலையங்களுக்கு உரிய மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரிப்பதற்கும், விற்பனைகளை மேம்படுத்துவதன் மூலம் வருமானங்களை கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் டையில் செயல்திட்டத்தின் கீழ் 2021 செப்தெம்பர் மாதம் முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 2,924.73 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்று பெறப்பட்டிருந்ததுடன் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியாக ரூபா 129.59 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தமை கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அந்த வரி அனுப்பபட்டிருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வட் வரி அறிக்கை தயாரித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் 2025 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த அறிக்கையின் படி 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 112.44 மில்லியன் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 6.35 மில்லியன் ஆக ரூபா 118.79 மில்லியன் செலுத்த வேண்டி இருந்தது. எனினும் நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதி நெருக்கடியான நிலமையின் காரணமாக இதுவரையில் இந்த தொகையை செலுத்துவதற்கு முடியாதுள்ளது. | பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட வரித் தொகை உரிய பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட வரிச் சட்டத்தின் 21 (1) ஆம் பந்தியின் பிரகாரம் சகல வரி அறவிடக் கூடிய ஒவ்வொரு வரி அறவிடக் கூடிய கால எல்லை முடிவடைந்த பின்னர் அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் அல்லது அதற்கு முன் வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2024 ஆம் ஆண்டிற்கான வரி அறிக்கை கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையிடப்படுகின்ற திகதியில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான பெறுமதி சேர் வரி அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டுக்கான பெறுமதி சேர் வரி அறிக்கை 2025 நவம்பர் மாதம் முடிவடைவதற்கு முன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் வரி அறிக்கை குறித்துரைத்த திகதிகளின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2009 இன் 15 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டுள்ள 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 22 (6) (iii) மற்றும் (iv) என்ற பந்திகளின் பிரகாரம் உள்நாட்டு விலையில் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்படுகின்ற பெறுமதி சேர் வரிக்காக பட்டியல் திகதியில் இருந்து 12 மாத காலமும் இறக்குமதிகளுக்காக 24 மாத காலத்திலும் அதற்கான வருமான | ஏற்றுக்கொள்கின்றோம் | வட் வரி அறிக்கை உரிய கால எல்லையில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று எடுக்க வேண்டி இருந்ததுடன் எதிர்காலத்தில் இடம் பெறக் கூடிய நட்ட |

| | | | |
|---|---|---|---|
| | வரி கூற்று பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமையினால் முன்னர் செலுத்தப்பட்ட வரி (உள்ளீட்டு வரி) கால எல்லையில் மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்காக செலுத்த வேண்டிய வரி ரூபா 90 மில்லியனை குறைத்துக் கொள்வதற்காக காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. அதன் படி 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது டையில் இறக்குமதிக்காக முறையே செலுத்தப்பட்ட ரூபா 61.41 மில்லியன், ரூபா 60.13 மில்லியன் மற்றும் ரூபா 1.74 மில்லியன் பெறுமதி சேர் வரிகளின் கூட்டுமொத்தம் ரூபா 123.28 மில்லியன் ஆக இருந்ததுடன் அறிக்கை கையளிக்காமையின் அடிப்படையில் அந்த பெறுமதியும் கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தது. | | நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (i) 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 28.66 மில்லியன் ஆன உள்நாட்டு விலையின் கொள்வனவின் அடிப்படையில் வட் வரி கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 2024 ஆகஸ்ட் 30 வரை உள்நாட்டு கொள்வனவுகளுக்காக செலுத்தப்பட்ட வரித் தொகையும் கழித்துக் கொள்வதற்கு முடியாது இருந்தது. அதன் படி 2021 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட உள்நாட்டு கொள்வனவு மற்றும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியின் அடிப்படையில் செலுத்தப்பட்ட மொத்த வட் வரி பெறுமதியான ரூபா 151.94 மில்லியன் கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மேற்படி |
| (ஈ) | பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த கம்பனி ஒன்றினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் குறித்துரைக்கப்பட்ட வரி விடுதலையின் கீழ் பெறப்படுகின்ற விடயங்கள் தவிர ஏனைய விடயங்கள் விற்பனைக்காக வரி பட்டியல் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சீமெந்து, இரும்பு மற்றும் டைல் விற்பனைகள் | நிறுவனத்தால் வட் வரி கணிப்பிடும் போது முன்னைய ஆண்டுகளில் இருந்து இந்த முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. நிறுவனத்தின் வழங்குனர்களில் அநேகமானோர் வட் இற்காக பதிவு செய்யாது இருந்தமையால் பொதுவான வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை விற்பனை செய்யும் போது வட் பெறுமதி | 2009 இன் 15 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டத்தின் பிரகாரம் வரி விடுவிப்பு விடயங்கள் தவிர ஏனைய விற்பனை விடயங்களுக்காக வரிப் பட்டியல் விநியோகித்து வட் அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் வரியின் கீழ் வருமானமாக கணிப்பிடப்பட்டதுடன் சீட் மற்றும் ஏனைய விடயங்களின் விற்பனை வட் அகற்றப்பட்ட வழங்குனராக வட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்வினால் விசாரணை செய்த போது வட் உடன் வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்காக மாத்திரம் வட் செலுத்தப்படுவதாக கூறப்பட்டிருந்தது. அதன் படி பெறுமதி சேர் வரி சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வட் செலுத்த வேண்டிய ரூபா 2,233.56 மில்லியன் விற்பனை வருமானம் வட் நீக்கப்பட்ட வழங்கலாக காண்பித்து வட் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 178.68 மில்லியன் வட் வரி வருமானம் ஒன்று 2021 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | சேர்க்கப்பட்டு பொருட்கள் விற்பனை செய்ய வேண்டி இருந்ததுடன் அதன் பிரகாரம் சராசரி நுகர்வோர்களுக்கு விலை அதிகரிப்பு ஒன்று ஏற்படுகின்றது. அதன் பிரகாரம் ஏனைய வழங்குனர்களின் விலை எண்ணிக்கையுடன் கணிசமான வேறுபாடு காணப்படுகின்றமையால் இந்த முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. எனினும் சரியான திட்ட முறைமையின் பிரகாரம் வட் கணிப்பிடுவதற்காக முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி சரி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அனுப்புதல் வேண்டும். |
| (உ) | 2003 இன் 07 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டுள்ள 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 20 (6) ஆம் பந்தியின் பிரகாரம் எந்த ஒரு வகையிலும் பதிவு செய்த நபரினால் எந்த அரசாங்க நிறுவனத்திற்கும் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு வரியின் கீழும் வழங்குவதற்காக வரிப்பட்டியல் விநியோகிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் அவ்வாறான வரிப் பட்டியல் விநியோகிக்கப்படாது இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி சரியான திட்ட முறைமையின் பிரகாரம் வட் பட்டியல் விநியோகிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. | வரியின் கீழ் வழங்குவதற்காக வரிப் பட்டியல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 ஆதனவரி செலுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு மாநகர சபைக்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை ஆதனவரி ரூபா 19.24 மில்லியன் மற்றும் அதற்குரிய தண்டப்பணம் ரூபா 4.35 | நிதிக் கஸ்டங்களுக்கு முகம் கொடுத்திருந்த போதும் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய அதனவரி தொகை செலுத்துவதற்கு கம்பனி | ஆதனவரி குறித்துரைத்த திகதிக்கு முன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலுத்த வேண்டி இருந்தது. 2025 யூன் 30 ஆம் திகதி வரையில் நிலுவை ஆதனவரி மற்றும் தண்டப்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 24.17 மில்லியன் தொகை தீர்த்து வைப்பதற்கு காணப்பட்டதுடன் துண்டு கழிவுகளை அகற்றும் கட்டணம் ரூபா 0.35 மில்லியனும் செலுத்த வேண்டி இருந்தது. | நடவடிக்கை எடுத்துள்ளது. 2025 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி தொகை ரூபா 24.46 மில்லியனுக்கு உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு புதிய ஐந்து வருட வியாபார திட்டத்தில் உள்ளடக்கி அதனை செலுத்துவதற்கான திட்டத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மொரட்டுவ மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய 2008 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை ஆதன வரி மற்றும் தண்டப்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1.74 மில்லியன் மற்றும் கண்டி மாநகர சபைக்கு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஆதனவரி மற்றும் தண்டப்பணம் ரூபா 0.16 மில்லியன் என்பவற்றைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக் கஸ்டங்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய ஆதனவரிப் பணத்தை செலுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. 2025 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி தொகை ரூபா 1.79 மில்லியனுக்கு உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் புதிய ஐந்து வருட வியாபார திட்டத்தில் உள்ளடக்கி அந்த கொடுப்பனவு திட்டத்தின் பிரகாரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.7 ஆம் பந்தி | 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2025 யூலை 23 அந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் விற்றுத் தீர்க்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக அறிக்கை எதுவும் காணப்பட | சுற்றிக்கை ஏற்பாடுகளின் படி 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 66 படிவத்தின் பிரகாரம் தயாரித்து பிரதான பேரேட்டின் மீதி | பொருள் மெய்மையாய்வு பரிந்துரையின் பிரகாரம் விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | மற்றும் உள்ளபடியான மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் காணப்படாது இருந்தமையால் மிகை/ பற்றாக்குறை காணப்படவில்லை.<br><br>பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய பொருட்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவற்றை அகற்றுவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2025 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றுள்ளதுடன் விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் திறைசேரி பிரதி செயலாளரின் 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதிய MF/CG/02/(Cir) ஆம் இலக்க சுற்றறிக்கை | கம்பனியால் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பாக தகவல்கள் திறைசேரியின் கொம்ட்ரோலர் ஜனரால் இற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கொம்ட்ரோலர் ஜெனரால் இற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க அலுவலக உகரணங்கள் மற்றும் தளபாடப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் கொம்ட்ரோலர் ஜெனரால் இற்கு விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்டு ரூபா 50 மில்லியன் முற்பணத் தொகை மீள செலுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 செப்தெம்பர் 27 ஆந் திகதிய அமப/07/1625/342/021 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கொழும்பு 12 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் 100 | இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் கம்பனிக்கும் இடையே 2023 யூன் 29 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் படி இந்த ரூபா 50 மில்லியனுக்கு | முற்பணத் தொகையை தீர்த்து வைப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பேர்ச் அளவினை உடைய நிலப் பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளித்து ரூபா 50 மில்லியன் முற்பணத் தொகை 2008 பெப்ரவரி 22 ஆந் திகதி கம்பனிக்கு பெறப்பட்டிருந்த போதிலும் மீண்டும் 2012 மே 07 ஆந் திகதி இலக்கம் 12/0446/540/005 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தில் 2007 செப்தெம்பர் 27 ஆந் திகதி மேற்கூறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டதுடன் பெறப்பட்ட முற்பணத் தொகை மீள செலுத்த வேண்டி இருந்தது. கணக்காய்விற்காக இறுதி தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் இந்த செலுத்த வேண்டிய முற்பணத் தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் இந்த தொகையை மீண்டும் வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் இந்த ரூபா 50 மில்லியன் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | களுத்துறை களஞ்சியத்திற்கு உரிய காணி ஒன்றில் இருந்து 40 பேர்ச் நிலப் பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையளிக்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் அதன் படி நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலின் போது களுத்துறைக் காணி கம்பனியின் பயன்பாட்டுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட காணியாக இருந்தமையால் அந்த காணி கையளிக்கும் முறை தொடர்பாக முகாமைத்துவ சபை கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிடுமாறு முன்மொழியப்பட்டுள்ளது. |

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 மே 09 ஆந் திகதி விற்பனை உதவியாளராக நியமிக்கப்பட்ட ஊழியர் ஒருவர் 2020 திசெம்பர் 14 மற்றும் இலக்கம் அமப/20/1992/301/015 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 2021 சனவரி 01 ஆம் திகதி முதல் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் உதவி செயலாளர் (தொழில்சார் நடவடிக்கைகள் மற்றும் ஊழியர் தொடர்பு)) ஆக நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>2021 மே 01 ஆந் திகதியில் அந்த பதவி கலைக்கப்பட்ட பின்னர் மீண்டும் அவரின் உள்ளபடியான பதவியில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். பின்னர் அவர் இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கைநூலின் இலக்கம் 3.5 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சரவை அங்கீகாரம் இன்றி 2022 யூலை 27 ஆம் திகதிய தலைவரின் கடிதத்தின் மூலம் 2022 யூலை 28 ஆந் திகதி நகர | உதவி செயலாளர் (தொழிற் சங்க ஊழியர் தொடர்பு) பதவி 2022 மே 09 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் 2022 யூலை 25 ஆம் திகதி முதல் மீண்டும் இந்த நிறுவனத்தில் சேவையில் நியமிக்கப்பட்டிருந்தார். அமைச்சரவைக்கு முன்னாள் தலைவரால் அனுப்பப்பட்டிருந்த போதும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்படாது இருந்ததுடன் சம்பள மீளளிப்பும் செய்யப்படவில்லை. வருகைப் பதிவேடு நகர அபிவிருத்தி வீடமைப்புத் துறை அமைச்சரின் பிரத்தியேக | உத்தியோகத்தருக்கு நியமனத்தை வழங்கும் போதும், விடுவிக்கும் போது முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அதற்கு இணங்காமல் செயற்பட்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிரக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, சம்பளம் மற்றும் படிகளை மீளளிப்புச் செய்து கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் 2022 மே முதல் 2024 யூன் 30 வரை கம்பனியால் உத்தியோகத்தரின் சம்பளமாக ரூபா 1.13 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த பணம் 2026 மார்ச் 20 வரை அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>அவ்வாறு இருக்கும் போது இலக்கம் 4.1/3815 என்ற 2024 யூலை 08 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அத்திகதியில் இருந்து மீண்டும் கம்பனியின் உதவி முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>அந்த கடிதத்தில் மூன்று நபர்களை உடைய குழுக்களின் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான குழு ஒன்றின் அங்கீகாரமோ அல்லது பணிப்பாளர் சபையின் தீர்மானமோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயலாளரால் அனுப்பப்பட்டுள்ளது. 2024 மே 03 இல் மூன்று நபர்களை உடைய குழு ஒன்று நியமித்து அந்த பரிந்துரையின் படி உதவி முகாமையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் தீர்மானம் எடுக்கப்படவில்லை. | |
| (ஆ) | இலக்கம் 01/2015 (ii) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய நிதியமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் படி கம்பனியின் தலைவருக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியான 145 லீற்றர் எல்லையை விஞ்சி 565 எரிபொருள் லீற்றர் இலக்கம் KJ 2654 என்ற ஜீப் வண்டிக்கு மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 0.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கையின் 3.2.1 பந்தியின் பிரகாரம் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படி போதியளவில் இல்லாத விசேட சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் சபையின் பரிந்துரையுடன் உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உள்ளபடியான எரிபொருள் செலவினங்களை மீளளிப்புச் செய்ய முடியுமாக இருந்த போதிலும் இந்த செலவினத்திற்காக அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | 2023 மார்ச் முதல் இலக்கம் 01/2015 (ii) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய நிதியமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் படி தலைவருக்கு உரித்தான எரிபொருள் படி தொகையில் இருந்து செலுத்தப்படாது இருந்ததுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்துப் பிரிவின் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. மாதம் தோறும் குறித்துரைத்த எரிபொருள் எல்லையினை விஞ்சுகின்ற லீற்றர் எண்ணிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.<br><br>2024 பெப்ரவரி மாதம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க உரிய பதவிகளுக்கு உரித்தான எரிபொருள் லீற்றர் அளவை விஞ்சிப் பெறப்பட்ட எரிபொருளுக்காக தேவையான அங்கீகாரம் அந்த காலத்தின் போது தாமதம் இன்றி பெற வேண்டி இருந்ததுடன் அங்கீகாரம் பெறப்படாத எரிபொருள்களின் பெறுமதியை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்தத அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

முதல் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை முழுமை பெறாமையினால் பணிப்பாளர் சபை கூட்டம் நடாத்தப்படாது இருந்ததுடன் அதிகரிக்கின்ற எரிபொருள் அளவிற்காக பணிப்பாளர் சபைக் கூட்டம் ஒன்று நடாத்தும் வரை மேவுகை அங்கீகாரம் ஒன்று முன்னாள் தலைவரால் வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

2024 செப்தெம்பர் மாதம் முதல் தலைவருக்கு உரித்தான எரிபொருள் படி அல்லது நிறுவனத்தின் மூலம் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்தலோ மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

2024 ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை தலைவரால் மீளளிப்புச் செய்யப்படாத எரிபொருள் படி அல்லது நிறுவனத்தின் மூலம் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்தல் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

2024 ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை தலைவரால் மீளளிப்புச் செய்யப்படாத எரிபொருள் படியின் பெறுமதி ரூபா 77,864 ஆக இருந்ததுடன் மேற்கூறப்பட்ட மேலதிகமாக பெறப்பட்ட எரிபொருளுக்கான பெறுமதியில் குறைக்கப்பட்ட பின்னர் பெறுமதியான ரூபா 741,589 இற்கான லீற்றர் எண்ணிக்கை வரிசை அமைச்சின் செயலாளரின்

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாது இருந்தமை தெரியவந்துள்ளது.<br><br>இந்த தொகை தொடர்பாக பணிப்பாளர் சபை தீர்மானம் எடுக்கவில்லை.<br><br>2024/01 கணக்காய்வு ஐயவினா மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2024 செப்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் நிறுவனத்தால் எரிபொருள் விநியோகித்தல் கைவிடப்பட்டதுடன் PED 01/2015 (ii) இன் பிரகாரம் செயற்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கம்பனி நிறைவேற்று பணிப்பாளருக்கு உரித்தான எரிபொருள் எல்லையான 145 லீற்றரை விஞ்சி 2024 சனவரி முதல் யூலை வரை பெறப்பட்ட 761 எரிபொருள் லீற்றருக்காக ரூபா 0.26 மில்லியன் அங்கீகாரம் இன்றி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2024 பெப்ரவரி மாதத்தின் பின்னர் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்படாது இருந்ததுடன் இந்த மேலதிகமாக செலுத்தப்பட்ட எரிபொருள் லீற்றர் அளவிற்காக 2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் பீ.ஈ.டி 01/2015 என்ற சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2023 மார்ச் முதல் இலக்கம் 01/2015 (ii) மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய நிதியமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் படி நிறைவேற்ற பணிப்பாளருக்கு உரித்தான எரிபொருள் படி தொகையில் இருந்து செலுத்தப்படாது இருந்ததுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்துப் பிரிவின் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் குறித்துரைத்த எரிபொருள் எல்லையினை விஞ்சுகின்ற லீற்றர் எண்ணிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | 2024 பெப்ரவரி மாதம் முதல் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை முழுமை பெறாமையினால் பணிப்பாளர் சபை கூட்டம் நடாத்தப்படாது இருந்ததுடன் அதிகரிக்கின்ற எரிபொருள் அளவிற்காக மேவுகை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.<br><br>2024/01 கணக்காய்வு ஐயவினா மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2024 செப்தெம்பர் மாதம் முதல் நிறுவனத்தால் எரிபொருள் விநியோகித்தல் கைவிடப்பட்டதுடன் PED 01/2015 (II) இன் பிரகாரம் செயற்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | கம்பனியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி இயலளவை அபிவிருத்தி செய்யும் நோக்கில் துறைசார்ந்த அனுபவ ஆலோசனையாளர்கள் இரண்டு பேரை நியமிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்து இருந்தது. அதன் பிரகாரம் 2023 யூன் 14 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் மாதாந்தம் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 0.075 மில்லியன் வீதம் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 யூன் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலத்தில் கம்பனியால் ஆலோசனையாளர்களுக்காக ரூபா 1.13 மில்லியன் படி செலுத்தப்பட்டிருந்தது. ஆலோசனையாளர்களின் உடன்படிக்கையின் படி எதிர்பார்க்கப்பட்ட சேவை, திட்டமிடல் அல்லது நலன்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்தமை தொடர்பாக 2024 ஆகஸ்ட் 21 மற்றும் 2025 யூலை 24 ஆம் திகதிகளில் தகவல் அறியும் கடிதம் மூலம் தயாரிக்கப்பட | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்விற்காக தேவையான தகவல்களை தாமதம் இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் விளைவற்ற செலவினங்களுக்கு பொறுப்பான தரப்பினரிடம் இருந்து மீள அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய திட்டம் மற்றும் வழிகாட்டல்களின் செயல் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதும் 2026 மார்ச் 20 வரையும் தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் அந்த செலவினங்களின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக கணக்காய்வில் பிரச்சனையாக இருந்தது. | | |
| (உ) | இரத்தினபுரி புதிய நகர பூங்கா நிர்மாணிப்பதற்கு தேவையான நிர்மாணப் பொருட்களை வழங்குதல் தொடர்பாக சப்பிரகமுவ மாகாண பிரதம அமைச்சு 2024 யூலை 03 ஆந் திகதி இலக்கம் CM/DE/7/SP/2024/3 என்ற கட்டளை சமர்ப்பித்திருந்தது. அதன் பிரகாரம் 2024 யூலை 10 ஆந் திகதி கூடியிருந்த பெறுகைக் குழுவிற்கு கம்பனியில் பதிவு செய்யாத வழங்குனர்கள் மூன்று பேரிடம் இருந்து பெறப்பட்ட கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கல்வனைஸ் குழாய்கள் கொள்வனவு செய்வதற்குரிய வழங்குனரின் கூறுவிலைகளை விசாரணை செய்த போது மாதிரிகளில் குறிப்பிடப்படாத கூறுவிலைகளைப் பெற்று அந்த கூறுவிலைகள் மதிப்பீடு செய்து மதிப்பீட்டாளர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சந்தையில் பல்வேறு தடிப்பத்தில் (Guage) உடைய பல்வேறு வகையில் G.I குழாய்கள் காணப்படுகின்றமையினால் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவும் இன்றி பெறுகைக் குழு கூறுவிலைகளை மதிப்பிட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வில் பிரச்சனையாக இருந்தது.<br><br>மேலும் இலக்கம் 0358 மற்றும் 2024 யூலை 12 ஆம் திகதிய கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 0.40 மில்லியன் தொகை 1½ ʺ 6m அளவில் G.I குழாய்கள் 30 கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது பெறப்பட்ட சந்தை விலையின் பிரகாரம் G.I குழாய் ஒன்று ரூபா 4,190 தொகை, ரூபா 4,400 தாகை, ரூபா 4,450 மற்றும் ரூபா 5,200 போன்ற விலைகளின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றமை அவதானிக்கப்பட்டமையால் G.I குழாய் ஒன்று ரூபா 13,350 ஆக சந்தை விலையை விஞ்சி உயர்ந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களாக இருந்தமை கணக்காய்வின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முறையான வகையில் பதிவு செய்த வழங்குனர்களிடம் இருந்து பெறப்பட்ட வழங்குனரிடமிருந்து கூறுவிலைகள் கோருவதற்கும், குறித்துரைத்த மாதிரியைத் தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் அடிப்படையில் கொள்வனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் இது தொடர்பாக நிதி மோசடிகள் காணப்படுகின்றதா என பரீட்சித்து அதன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போது அவதானிக்கப்பட்டது.

**2.9 செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வணிக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1992 ஆம் ஆண்டின் போது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழும், 2010 ஆம் ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திக் கீழும் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்துடன் அதன் கீழ் தூர நோக்கு ‘‘நியமத்திற்கு இணங்க உயர் தரத்தை உடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை போட்டி விலையில் நாடு முழுவதும் வழங்குவதற்கு முன்னுரிமையளித்தல் மற்றும் அரச நிறுவனம் ஒன்றாக சமூக பொறுப்புக்களை நிறைவேற்றி இலங்கை மக்களுக்கு ஆகக் கூடிய நம்பிக்கை ஒன்றை கட்டி எழுப்புதல்’’ ஆகும். அதன் பிரதான பணியாக அரசாங்கத்தினதும், தனியார் துறையினதும் கட்டிடங்கள் மற்றும் எனைய நிர்மாண வேலை ஒழுங்கு முறைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டிடப் பொருட்கள் தேவையினை மதிப்பீடு செய்தல் மற்றும் வழங்குதல், கட்டிடப் பொருட்கள் வழங்கும் வழிகளைக் கண்டறிதல், அரச மற்றும் தனியார் துறைகளுக்கு இடையூறின்றி கட்டிடப் பொருட்கள் வழங்கும் அரசாங்கத்தின் திணைக்களம், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வீடமைப்பு நிர்மாணிப்பாளர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்காக கட்டிடப் பொருட்கள் இறக்குமதி செய்தல் மற்றும் இந்த நாட்டில் உற்பத்தி செய்த கட்டிட மற்றும் | ஏற்றுக்கொள்கின்றோம். | கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் பிரதான பணிகளை நிறைவேற்றும் வகையிலும், அதன் தூர நோக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிர்மாணப் பொருட்கள், இயந்திர உபகரணங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் எனைய துணைப்பாகங்களை இலங்கை முழுவதும் விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகும்.

எனினும் தற்போது கம்பனியால் கம்பனியில் நவீனமயப்படுத்தப்பட்ட பிரதான கண்காட்சிக் கூடத்தில் தனியார் கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குனர்களின் விற்பனை கொட்டகைகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்து இலாப எல்லையில் விற்பனை, கம்பனியின் கிளை அலுவலகம் மூலம் பிரதான அலுவலகத்தில் இருந்து அனுப்படுகின்ற சீமெந்து, சீட் மற்றும் இரும்பு குறித்துரைத்த விலையில் விற்பனை செய்தல், கண்காட்சிக் கூடத்தில் காணப்படாத பொருட்கள் வெளிவியாபாரிகளிடம் இருந்து கொள்வனவு செய்து இலாப எல்லையில் விற்பனை செய்தல் மற்றும் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வேறு நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட டைல் விற்பனை செய்தல் போன்ற வரையறுக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபட்டிருந்தது.

(ஆ) கம்பனி நடாத்திச் செல்லும் நோக்கில் உயர் நியமத்தை உடைய கட்டிடப் பொருட்கள் வழங்குவதன் மூலம் சந்தையில் முன்னுரிமையாக இருத்தல், முன்னுரிமை நியமத்தை உடைய கட்டிடப் பொருட்கள் உள்நாட்டு உற்பத்திகளை செய்வதற்கு ஊக்கிவிப்பதன் மூலம் பொருள் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்து சந்தை விரிவுபடுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கோ அல்லது எதிர்காலத்தின் போதும் அது கொள்வனவாளர்கள் கோருகின்ற பொருட்கள் அவர்களின் மாதிரிகளின் பிரகாரம் (வியாபாரப் பெயரின் பிரகாரம்) பெற்றுக் கொள்வதற்கு ஏற்படுகின்றமை மற்றும் அதற்கு மேலதிகமான அநேகமான உற்பத்திகள் மற்றும் நேரடியாக இறக்குமதி செய்வதற்கான பணம் செலுத்தாமையின் அடிப்படையில் கம்பனி கறுப்புப் பட்டியலில் ஏற்பட்டு இருந்தமையால் அவர்களுடன் வியாபாரங்களை அகவிதி விஞ்ஞாபனங்களின் பிரகாரம் கம்பனியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உபாய வழித் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான திட்டம் ஒன்று காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | மேற்கொள்வதற்கு முடியாமை போன்ற நிலமை ஏற்பட்டு இருந்தது. நிறுவனத்தில் காணப்படுகின்ற மூலதன பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக் குறையினால் உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்தல், விநியோகித்தல் சந்தையை விரிவுபடுத்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிறுவனத்திற்கான இயலுமை காணப்படவில்லை. | |

## 2.10 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 யூலை 28 கணக்காய்வுத் திகதி வரையிலும் கம்பனிக்குச் சொந்தமான 12 வாகனங்களுக்கு இடையே 06 வாகனங்கள் ஓட்ட நிலைமையில் காணப்படவில்லை. | முகாமைத்துவம் கருத்துரை தெரிவிக்கவில்லை. | பழுதுபார்க்கக் கூடிய நிலைமையில் உள்ள வாகனங்களைப் பழுது பார்ப்பதற்கும், ஏனைய வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 226–3273 என்ற லொறி வண்டி 2014 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டதுடன் தற்போது துருப்பிடித்த நிலையில் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் போதும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை விற்றுத் தீர்க்கப்படவில்லை. விற்றுத் தீர்ப்பதற்காக அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதும் இதுவரை அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விற்றுத் தீர்ப்பதற்காக தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்றுத் தீர்ப்பட வேண்டிய சொத்துக்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலக்கம் 251 – 9413 என்ற கெப் வண்டி பழுதுபார்ப்பதற்காக 2019 யூலை 23 ஆம் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ரூபா 0.51 மில்லியன் முற்பணமாக சேவை வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் பழுது பார்க்கப்படாமல் நிறுவன வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2025 | தற்போது உரிய தரப்பினரிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 0.51 மில்லியன் தொகையில் தற்போது ரூபா 0.18 மில்லியன் தொகை நிறுவனத்திற்கு | கெப் வண்டியை பழுது பார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மிகுதி முற்பணத் தொகையை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| யூன் 30 ஆந் திகதி வரையில் சேவை வழங்கும் நிறுவனம் ரூபா 0.18 மில்லியன் தொகையை அறவிட்டு இருந்த போதிலும் மிகுதி ரூபா 0.32 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்துள்ளது. | தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். |

**2.11 பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தினை திருத்தியமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 செப்டம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 21/0084/302/002 என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதிய இலக்கம் அமப 21/1779/302/002/-1 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் பிரதமர்/ ஐந்தாவது நிறைவேற்று சனாபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தியமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட திருத்தியமைத்தல் மற்றும் பராமரிப்புகளை மேற்கொள்வதற்கு உரிய கம்பனியால் பொருள் வழங்குவதற்காக ரூபா 639.22 மில்லியன் பெறுமதியான பட்டியல் 2024 மே 14 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக உடன்படிக்கை இன்றி ரூபா 13.07 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கி கட்டிடக் கலைஞர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆந்த உததியோகத்தரின் வாய்மொழி மூல ஆலோசனையின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களால் பெயரிடப்பட்ட 16 வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோராமல் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் கட்டளையின் அடிப்படையில் இந்த | எதிர்காலத்தில் இவ்வாறான முறையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டியைப் பின்பற்றி போட்டியாளர் விலைகளைக் கோருவதன் மூலம் கொள்வனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகபூர்வ இல்ல செயற்திட்டத்திற்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டு பட்டியல் இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | விநியோகிக்கப்பட்ட பட்டியலின் பெறுமதியில் ரூபா 554.58 மில்லியன் பெறுமதி பிரதமர் அலுவகத்தின் நிதியேற்பாடின் அடிப்படையில் ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் இந்த செலவினங்களில் ரூபா 84.64 மில்லியன் 2026 மார்ச் 20 ஆந் திகதி வரையிலும் பிரதமர் அலுவலகம் தீர்த்து வைத்திருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வின் பிரகாரம் ரூபா 110.84 மில்லியன் தொகையை அறவிட வேண்டி இருந்தமை தெரியவந்துள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை அறவிட்டு கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.12 சீமெந்து இறக்குமதி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தலைமையில் சீமெந்து இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற கம்பனிகளின் கூறுவிலைகளைக் கோருதல், கூறுவிலைகள் அனுப்பப்பட்டிருந்த கம்பனிகளுக்கு இடையே ஒரு கம்பனியுடன் உடன்படிக்கை செய்யுமாறும் அதற்காக முற்பணத் தொகையாக ரூபா 05 மில்லியன் செலுத்துமாறும் இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்மாணம்) வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் 2022 மார்ச் 14 ஆந் திகதி முன்னாள் இருந்த தலைவரினால் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நாட்டில் காணப்படுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடிகளுக்கு இடையே நாணயக் கடிதம் திறத்தல் மக்கள் வங்கி நிராகரித்தன் காரணமாக சீமெந்து இறக்குமதி செய்ய முடியாது இருந்ததுடன் அது தொடர்பாக முன்னர் உறுதிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்படாமல் செலுத்தப்பட்ட ரூபா 05 மில்லியனை மீண்டும் அறவிடுவதற்கு முடியாது இருந்தது.<br><br>இது தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சு | உரிய செயற்திட்டத்திற்காக வழங்காமையின் அடிப்படையில் இந்த தொகையை மீள அறவிடுவதற்காக தனியார் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வழங்குனரின் பதில் கடிதம் ஊடாக நிறுவனத்தின் மூலம் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படாது இருந்தமையால் இந்த வைப்பினை மீள பெற்றுக் கொள்ளுதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவனத்தின் சட்டப் பிரிவின் மூலம் காண்பிக்கப்பட்ட விடயங்களின் படி முதன்மையாக ஊழல் விசாரணை பிரிவிற்கு அல்லது குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அல்லது இலஞ்ச ஊழல் பிரிவிற்கு முறைப்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. முறைப்பாட்டு விசாரணையின் பின்னர் | விசாரணை அறிக்கையின் பரிந்துரையை அமுல்படுத்தாமைக்கான காரண விடயங்களை இனங்கண்டு அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் கம்பனிக்கு அறவிட வேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் அரச நிர்வாக , உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி அமைச்சின் விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் 2023 செப்தெம்பர் 26 ஆந் திகதி அறிக்கையின் பரிந்துரையின் படி இறக்குமதி நடவடிக்கைகளின் போது கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த மேற்கூறப்பட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொது ஆதன சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரையையும் அமுல்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய முறை தொடர்பாக அந்த நிறுவனம் ஒன்றிணைந்து மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. |

**2.13 நிறுவனத்தின் ஊழியர்களுக்கு கடன் அடிப்படையில் பொருட்கள் வழங்குதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தால் முறையான அங்கீகாரம் மற்றும் முறையான திட்ட முறைமை இன்றி மாதாந்த சம்பளத்தில் இருந்து அறவிடும் அடிப்படையில் கம்பனியின் ஊழியர்களுக்கு கட்டிடப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 30 ஆந் திகதி வரையில் ரூபா 1.31 மில்லியன் தொகை 08 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டி இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் மூலம் இந்த பொருட்கள் வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்து ஒரே தடவையில் பணத்தை பெற முடியுமாக இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. இந்த பெறுமதியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிய ஊழியர் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஊழியருக்கு வழங்கப்பட்ட ரூபா 0.11 மில்லியன் பெறுமதியான பொருட்களுக்காக 2025 யூன் 30 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 0.058 மில்லியன் தொகையும் உள்ளடங்கும். முன்னர் வழங்கப்பட்ட பொருட்களுக்காக பெறுமதி அறவிட்டு பூர்த்தி செய்வதற்கு முன்னர் எந்த ஒரு வரையறையும் இன்றி அந்த நபருக்கு மீண்டும் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது. | கடன் அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஊழியர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற எழுத்து மூலக் கோரிக்கைக்கு பொது முகாமையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் பொருட்கள் வழங்கப்படுகின்றது. அதன் போது பொது முகாமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் கடன் அடிப்படையில் கம்பனியின் ஊழியர்களுக்கு கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்று அதற்காக உரிய திட்ட முறைமை ஒன்றைத் தயாரித்து தேவையான அங்கீகாரம் தாமதம் இன்றி பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மாத்திரம் அந்த செயற்பாடுகளை அமுல்படுத்துல் வேண்டும். |

**2.14 டைல் செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நாட்டில் அந்நிய செலாவணியின் நெருக்கடியின் காரணமாக இறக்குமதி வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சந்தையில் டைல் பற்றாக்குறையை குறைத்துக் கொள்ளும் நோக்கில் டைல் இறக்குமதி செய்யும் அனுமதி 2021 யூன் 11 ஆந் திகதிய இலக்கம் 2231/18 என்ற அதிவிசேட வர்த்தமானியில் கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய அளவில் நிதி வலு காணப்படாது இருந்தமையின் காரணமாக அந்த செயற்திட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற அந்த பொருள் விற்பனைக்கு விருப்பம் தெரிவிக்கின்ற கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடல் "BMC" பெயரில் அவர்களின் பணத்தில் டைல் இறக்குமதி செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. டைல் செயற்திட்ட ஆரம்பத்தில் இருந்து 2024 திசெம்பர் 31 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட டைல் இறக்குமதிகளின் பெறுமதி ரூபா 928.88 மில்லியன் ஆக இருந்ததுடன் விற்பனைப் பெறுமதி ரூபா 2,695.82 மில்லியன் ஆகும்.<br><br>2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இறக்குமதி செய்யப்பட்ட டைல்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய இலாபம் ரூபா 64.84 மில்லியன் மற்றும் இறக்குமதி செலவினம் கூட்டுத்தாபனத்தால் செலவிட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 22.92 மில்லியனும் உள்ளடக்கிய பெறவேண்டிய மொத்த பெறுமதி ரூபா 87.76 மில்லியன் ஆகும். அதற்காக வழங்குனர் செலுத்தாமல் நிறுத்தி வைத்துள்ள விற்பனைப் பெறுமதி ரூபா 36.37 மில்லியன் குறைக்கப்படும் இடத்து மேலும் அறவிட வேண்டிய மீதி ரூபா 51.39 மில்லியன் ஆகும். கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 6979 டையில் இருப்பு விற்பனை செய்யாமல் எஞ்சியுள்ளதுடன் அதன் பெறுமதி ரூபா 6.46 மில்லியன் மாத்திரம் ஆகும். | ஏற்றுக்கொள்கின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், டைல் விற்பனைக்காக கிடைக்க வேண்டிய பணத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.15 மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக கம்பனியினால் பொருட்கள் விநியோகித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் தேசிய | 2025 யூலை 15 ஆம் திகதி கௌரவ அமைச்சர் மற்றும் | விநியோகிக்கப்பட்ட கட்டிடப் |

| | | |
|---|---|---|
| வீடமைப்பு அதிகார சபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட சூரிய பொக்குன தெபொக்காவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டு உரிமையாளர்களுக்கு தேவையான கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலாங்கொடை, தங்காலை, லுணுகம்வெஹர, திஸ்ஸ, வீரகெட்டி, எம்பிலிப்பிட்டி, சூரியவெவ என்ற கிளைக் களஞ்சியங்களில் இருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2021 வரை விநியோகிக்கப்பட்ட கட்டிட பொருட்களுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான கடன் மீதி ரூபா 27.56 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது சகல ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு மாதம் ஒன்றுக்குள் பணம் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2025 யூலை 18 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 27.56 மில்லியன் பெறுமதி உடைய ஆவணங்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட போது இதுவரை அந்த பணத்தை செலத்துவதற்கு உரிய நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருட்களுக்காக அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.16 கணனி மென்பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணப்படுகின்ற கணனி மென்பொருள் முறைமை செயற்திறனாக இல்லாது இருந்தமையால் புதிய கணனி மென்பொருள் முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரி பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினைப் பின்பற்றாமல் ரூபா 0.98 மில்லியன் முற்பணம் பொது முகாமையாளரின் அங்கீகாரத்துடன் 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் கம்பனிக்கு பொருத்தமான கணனி மென்பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய தனியார் நிறுவனத்தின் பணிப்பாளரினால் இந்த முற்பணத் தொகையை மீண்டும் அறவிடல் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதத்திற்கு காண்பிக்கப்பட்ட பதிலின் பிரகாரம் பதிலின் பிரகாரம் தற்போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான ஆரம்ப கட்ட வேலை நடவடிக்கைகளுக்காக நிறுவன ரீதியில் நிதி ரீதியான மற்றும் ஊழியர் கிரயம் செலவிடப்பட்டுள்ளதாகவும் செயற்திட்டத்தின் அடுத்து வரும் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் முதலாவது தவணைக்காக விலைப் பட்டியலை செலுத்துவற்கு விநியோகிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணத் தொகையை மீண்டும் வழங்குவதற்கு முடியாது இருந்ததாகவும் கூடிய விரைவில் செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு தேவையான | கம்பனி தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் கணனி முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு பெறுகைகள் வழிகாட்டியை பின்பற்றாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த ஊழியர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகளை வழங்குமாறும் கம்பனியால் கோரப்பட்டுள்ளது. | |

**2.17 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 நவம்பர் 09 ஆந் திகதிய இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கம்பனிக்குச் சொந்தமான காணியில் 100 பேர்ச் காணி அளவு இலங்கை வங்கிக்கு ரூபா 70 மில்லியன் தொகையில் விற்பனை பிணையின் மூலம் கையளிக்கப்பட்டதுடன் பின்னர் கம்பனியால் 2018 ஒக்தோபர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட ரூபா 500 மில்லியன் கடன் தொகையில் மேற்கூறப்பட்ட விற்பனைக் குரிய தொகையான ரூபா 70 மில்லியன் தொகையுடன் கடன் மேலதிகப் பற்றுத் தொகையும் அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டியையும் உள்ளடக்கி ரூபா 199.05 மில்லியன் தொகை ஈடுசெய்யப்பட்டிருந்தது. இலங்கை வங்கி மேற்குறிப்பிடப்பட்ட பணத்தை ஈடுசெய்த பின்னர் வங்கியினால் தயாரிக்கப்பட்டு அனுப்பபட்டிருந்த உரித்துறுதியின் பெறுமதிக்கு உரிய முத்திரைக் கட்டணமான ரூபா 18.40 மில்லியன் தொகை செலுத்தி மீண்டும் காணி கையேற்க வேண்டியிருந்த போதிலும் 2025 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கையேற்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணிப் பகுதிக்கு முத்திரைக் கட்டணம் செலுத்தி உரித்துறுதி எழுதுவதற்கு இலங்கை வங்கியுடன் கலந்துரையாடப்பட்டதுடன் உரித்துறுதி எழுதுவதற்காக தேவையான ஆவணங்களுக்கு இடையே 2015 ஆம் ஆண்டு முதல் கம்பனி பதிவாளர் அலுவலகத்தில் நாளது வரையாக்கப்படாத விண்ணப்பம் 20 மற்றும் 15 காணப்பட்டது. 2023 யூன் மாதம் அந்த ஆவணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணமான ரூபா 5.38 மில்லியன் தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் மீண்டும் முத்திரைக் கட்டணம் தொடர்பாக உடன்படிக்கை பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை வங்கி அறிவித்ததுடன் மாகாண இறைவரித் திணைக்களத்தின் மூலம் மீண்டும் மதிப்பீடு செய்து முத்திரைக் கட்டணமாக ரூபா 23.99 மில்லியன் என அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியின் உரித்தைக் கையேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை கடை வீதி, கிழக்கு இலக்கம் 417/ஏ என்ற இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்படுவதுடன் கம்பனி அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் மூலம் 2024 சனவரி 30 ஆந் திகதி எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் வாடகை அடிப்படையிலோ அல்லது சின்னக்கடை உரித்துறுதி | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு அல்லது முறையான பிரகாரம் கட்டிடத்தை பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையிலோ 24 பேர்ச் நிலப் பகுதியை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. உரிய ஆவணங்களுடன் பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் காலக் கிரமத்தில் பத்திரத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 03 றூட் 35.6 பேச் அளவான அநுராதபுர காணியொன்றின் வழக்கு நடவடிக்கைகள் 2013 யூலை 07 ஆந் திகதி முடிவடைந்த போதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி உரிமையினை கையேற்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை. | உரித்தினைக் கையேற்பதற்குரிய மிகுதி நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் கம்பனியின் சொத்துக்களை பாதுகாக்காமை தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி உரித்தினைக் கையேற்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் கீழ் உள்ள 04 ஏக்கர் 2 றூட் 17 பேர்ச் அளவான மொறட்டுவ, அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை என்பவற்றில் அமைந்துள்ள காணிகளுக்காக உரித்துறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் காணிக்காக அளவைத்திட்ட வரைபடமும் தயாரிக்கப்படவில்லை. | காணப்படுகின்ற நிதிக் கஸ்டத்திற்கு மத்தியில் இதுவரையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் வீடுகளுக்காக அளவைத்திட்ட வரைபடம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | அளவைத்திட்ட வரைபடத்தை தயாரித்து உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மொரட்டுவை பொருப்பன இலக்கம் 549/A இல் அமைந்துள்ள காணியின் உரித்து 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், கம்பனியால் காணியின் உரித்துறுதியை தயாரித்துக் கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரித்தை கையேற்பதற்குத் தேவையான ஆவணங்கள் தற்போது காணி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக் கொள்வதற்கு உரிய உரித்து உறுதி தயாரிப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) கம்பனிக்குச் சொந்தமான குன்குனியார் உப்புக்குளம் கரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 01 றூட் 31.6 பேர்ச் அளவான காணி, நுவரெலியா பம்பரகெலே கட்டிடம் மற்றும் எம்பிலிப்பிட்டி யோதகமயில் அமைந்துள்ள 02 வீடுகள் என்பன 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | யாழ்ப்பாணத்தின் காணி அபிவிருத்தி செய்ய வேண்டி இருந்ததுடன் அனுராதபுரம் பண்டுலகம வீடு, எம்பிலிப்பிட்டி யோதகம இல் இரண்டு வீடுகள், நுவரெலியா பம்பரக்கலே கட்டிடத்தை பயன்படுத்துவதற்காக பழுது பார்த்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதிக் கஸ்டத்தின் காரணமாக யாழ்பாணத்தின் காணி, அனுராதபுர பண்டுலகம வீடு, எம்பிலிப்பிட்டி யோதகம இல் இரண்டு வீடுகள், நுவரெலிய பம்பரக்கலே கட்டிடம் என்பவற்றை பழுதுபார்க்க முடியாதிருந்தது. | பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களை ஆக்கபூர்மான பணிகளுக்காக ஈடுபடுத்தி செயற்திறனான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (எ) மகாவலி அதிகார சபையினால் 50 வருடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள எம்லிப்பிட்டியில் 01 றூட் காணிக்காக 1997 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை வாடகைத் தொகை மற்றும் தண்டப்பணம் ரூபா 1.79 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இந்த வாடகைப் பணம் செலுத்தாமையின் காரணமாக குத்தகை முடிவுறுத்த வேண்டுமெனவும், சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மகாவலி அதிகார சபை அறிவித்திருந்த போதிலும் கம்பனி வாடகை உடன்படிக்கையின் படி வாடகைப் பணம் செலுத்தியிருக்கவில்லை. | இந்த நிலுவை வாடகைத் தொகை மற்றும் தண்டப்பணம் நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதிக் கஸ்டத்தின் அடிப்படையில் இதுவரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகை உடன்படிக்கையின் படி வாடகைப் பணம் செலுத்துவதற்கோ அல்லது அதிகாரசபையுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.18 கம்பனிக்கு சொந்தமான ஆதனங்களை வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புதிய மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக் கொள்ளாமல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விலையிலேயே மீளாய்வாண்டின் போது சீமெந்துக் களஞ்சியம், | எதிர்காலத்தில் புதிய விலைகளின் கீழ் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதற்கும் கம்பனிக்கு நலன் வாய்ந்ததாக சொத்துக்களை வாடகைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 06 களஞ்சியம் மற்றும் சங்கராஜ இலக்கம் 11 களஞ்சியம் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாத்தறை லங்கா சதொச விற்பனைக் கடைக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பனிக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்றை மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் தற்போது வரை குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | எதிர்காலத்தில் புதிய விலைகளின் கீழ் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டிடத்தை முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சங்கராஜ கண்காட்சி கூடத்தில் சதுர அடி 500 தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் 2020 சனவரி 23 ஆந் திகதி கண்காட்சிக் கூடத்தில் இருந்து விலகிச் சென்றிருந்தது. அந்த நிறுவனத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 0.14 மில்லியன் தொகை கம்பனிக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிறுவனத்தின் மூலம் எமக்கு அறவிட வேண்டியுள்ள தொகை தொடர்பாக அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த நிறுவனத்தால் அந்த தொகையில் ஒரு பகுதியாக அந்த தொகையை பகுதியாக செலுத்துவதற்கு கோரிக்கை இடப்பட்டதுடன் அதற்கு இணக்கம் தெரிவித்து நிறுவனத்தின் கணக்குப் பிரிவு 2023 பெப்ரவரி 09 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் இது வரை செலுத்தப்படவில்லை. அறவிடுவதற்கு உள்ள இயலுமையைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 ஏப்ரல் மாதம் முதல் சதுர அடி ஒன்று ரூபா 45 வீதம் 1480 சதுர அடிக்காக இலக்கம் 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் கம்பனியின் வளவில் கம்பனிக்குச் சொந்தமான களஞ்சியம் ஒன்று மாதம் ஒன்றுக்கு ரூபா 0.066 மில்லியன் தொகையில் ஒரு நபருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக் காலம் 2017 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையாக இருந்ததுடன் | முன்னாள் நிறுவனத்திற்குச் சொந்தமாக சட்ட உத்தியோகத்தர் காணப்படாமையினால் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியள்ளது. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதற்கும் கம்பனிக்கு நலன் வாய்ந்ததாக சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதிய உடன்படிக்கை கைச்சாத்திடாமல் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் காணப்பட்ட வாடகை தொகைக்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | தேசிய இளைஞர் படையணி (National Youth Corps) நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 0.16 மில்லியன் தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த மாளிகாவ வீதி இரத்மலானையில் அமைந்துள்ள கட்டிடம் 2019 ஒக்தோபர் மாதம் முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | முகாமைத்துவம் கருத்துரை வழங்கியிருக்கவில்லை. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கோ அல்லது வாடகைக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.19 வெளித்தரப்பினர்களிடம் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்ட களஞ்சியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் திருகோணமலை, குழியாப்பிட்டி, குருநாகல் மற்றும் தங்காலை விற்பனை நிலையங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் தங்காலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 0.035 மில்லியன் மாதாந்த வாடகையில் ஏனைய நிலையங்களுக்காக ரூபா 0.030 மில்லியன் வீதமும் செலுத்துவதற்கு கம்பனி கட்டிட உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தது. இந்த கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளும் போது வாடகைப் பணம் மதிப்பீடு செய்து எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாது இருந்தது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தங்காலை விற்பனை நிலையம் மூடப்பட்டிருந்ததுடன் 2025 யூன் 30 ஆந் திகதி வரையில் ஏனைய நிலையங்கள் யாவும் நட்டம் பெறும் நிலையில் காணப்பட்டது. | தங்காலை விற்பனை நிலையத்திற்காக ரூபா 0.035 மில்லியன் மாதாந்த வாடகையும், குருநாகல் மற்றும் குழியாப்பிட்டியில் ரூபா 0.030 மில்லியனும், திருகோணமலைக்கு ரூபா 0.025 மில்லியன் தொகையும் செலுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் விற்பனை நிலையங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது வெளிப்படையாக இருக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி சகல தரப்பினருக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பெறுகை திட்டத்தின் கீழ் கட்டங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.20 வங்கிக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் 11 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் அதில் 09 கணக்குகள் செயல்நிலையிலும், 02 கணக்குகள் செயலிழந்தும் காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்காக ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் குறிப்பிட்டு சரியாக காசேட்டைப் பேணிச் செல்லப்படாதுடன் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது காசேட்டின் மீதிக்குப் பதிலாக வங்கிக் கூற்றின் மீதியை அடிப்படையாகக் கொண்டு உள்ளபடியான காசேட்டின் மீதி மற்றும் வங்கிக் கூற்றின் மீதி இணக்கம் செய்யாத வகையில் சீராக்கங்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | வங்கிக் கணக்கிற்கான பெறுவனவுக் காசேடு மற்றும் கொடுப்பனவுக் காசேடு தனித்தனியாகப் பேணிச் செல்லப்படுகின்றது. 2024 சனவரி 01 ஆந் திகதியில் காணப்பட்ட வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டின் சனவரி முதல் 2025 செப்தெம்பர் மாதம் வரையும் காசேட்டின் மீதி மற்றும் வங்கிக் கூற்றின் மீதி இணக்கம் செய்யும் வகையில் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | வங்கி இணக்கக் கூற்று சரியாகத் தயாரித்து காசு மற்றும் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களின் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும். |

**2.21 விசாரணையில் காணப்படுகின்ற வழக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2024 திசெம்பர் 30 ஆந் திகதி வரையில் செலுத்துவதற்கு காணப்பட்ட ரூபா 24.27 மில்லியன் நிலுவைப் பணத்தைக் கோரி இரண்டு வழங்குனர்கள் கம்பனிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் 02 வழக்குகளை தொடுத்திருந்ததுடன் சட்டத்தரணி கட்டணமாக கம்பனிக்கு மேலதிக கிரயம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | தாமதம் இன்றி வழங்குனர்களின் நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து சிக்கனமற்ற செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.22 நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 22 மில்லியன் ஆன 04 நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் ரூபா 05 மில்லியன் ஆன சேமிப்புக் கணக்கும் பிணையாக வைத்து கம்பனியால் ரூபா 24.30 மில்லியன் மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13.01 மில்லியன் மேலதிக பற்று மீதி காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 03 வங்கிக் கணக்குகளுக்காக அறவிடப்பட்டிருந்த மேலதிகப் பற்று வட்டி ரூபா 0.95 மில்லியன் ஆகும். | நிறுவனத்தில் கிரயத்தைக் குறைத்துக் கொள்வதற்காக நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்பினை பிணை அடிப்படையில் பெற்றிருந்த சகல மேலதிகப்பற்று வசதிகளையும் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு 2025 ஒக்தோபர் 07 ஆந் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான நிதிக் கட்டுப்பாட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களை கட்டுப்படுத்துதல் வேண்டும். |

**3. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகளின் பிரகாரம் பதவியணியினர், சம்பள அளவுத் திட்டம் மற்றும் ஆட்சேர்த்தல் நடைமுறை இதுவரை அங்கீகரிக்கப்படாது இருந்ததுடன் 2022 ஏப்ரல் 19 ஆம் திகதிய பொது முயற்சிகள் குழுவின் கட்டளை இலக்கம் 07 மற்றும் 16 மூலம் பதவியணினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த பதவியணியினர் மதிப்பீடு ஒன்று இந்த நிறுவனத்தில் காணப்படாது இருந்தமையால் 350 ஊழியர்களை உள்ளடக்கிய பதவியணியினர் மதிப்பீடு தயாரித்து 2022 மார்ச் 02 ஆம் திகதி கிராமிய வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கட்டிட பொருள் கைத்தொழில் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தின் போது பதவியணியினர் மதிப்பீட்டை திருத்துமாறு வழங்கப்பட்ட ஆலோசனையின் படி 245 இனை உள்ளடக்கிய பதவியணியினர் மதிப்பீடு தயாரித்து 2022 யூன் 08 ஆந் திகதி கடிதம் ஒன்றின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பதவியணியினரை மதிப்பிடுவதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் 2024 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் MUDH/HC/AD/176/14 என்ற நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சு செயலாளரின் கடிதத்திற்கு பதிலாக 2025 யூன் 16 ஆந் திகதிய இலக்கம் DMS/1734/V-III என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் காண்பிக்கப்பட்ட 2023 செப்தெம்பர் 05 ஆம் திகதிய இலக்கம் அமப/23/1483/604/030- | ஏற்றுக்கொள்கின்றோம். | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | II என்ற அமைச்சரவைத் தீர்மானம் அமுல்படுத்தப்படாது இருக்குமாயின் நிறுவனத்தின் எதிர்கால இருப்பு தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்து அது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனி இது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | 2016 மார்ச் 08 ஆந் திகதிய இலக்கம் 02/2016 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் காணப்படுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் மேலதிக ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அவ்வாறு இனங்காணப்பட்ட மேலதிக பதவியணியினர் தொடர்பாக சுயமாக ஓய்வு பெற்றுச் செல்லும் உத்தேச திட்ட முறைமை ஒன்றை அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் பதவியணியினர் தொடர்பாக அவ்வாறான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியினர் மதிப்பீடு ஒன்று எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனியில் இருக்கின்ற மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியணியினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 பெப்ரவரி 14 ஆந் திகதிய இலக்கம் 4.2/28 என்ற கம்பனியின் பொது முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த நிரந்தரமாக்கல் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி இலக்கம் 288/36 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும் போது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 செப்தெம்பர் 20 ஆந் திகதி இலக்கம் DMS/1734/V-II Temp | எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வாளரின் தேவையை இனங்கண்டு அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் இந்த பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 செப்தெம்பர் 20 ஆந் திகதி முதல் 2025 யூன் 30 ஆந் திகதி வரை அவ்வப்போது ஒப்பந்தகாலம் நீடிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த நிலமை இதுவரை சரி செய்து கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | | |
| (உ) | கம்பனியின் மூலதனம் பொதுத் திறைசேரியினால் ஈடுபடுத்தப்பட்டதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்த கம்பனி ஒன்றாகும். அதன் அகவிதி உறுப்புரையின் 78 ஆவது பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சர் மற்றும் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரிடம் விசாரணை செய்து திறைசேரி செயலாளரால் கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் பணிப்பாளர் நியமித்தல் கடிதம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைச்சின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தற்போது உரிய திட்ட முறைமைக்கு இணங்க பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது. | கம்பனியின் அகவிதி உறுப்புரைகளுக்கு இணங்க பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டிக் கோவையின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் பாதீட்டை தயாரித்து அங்கீகரித்துக் | ஏற்றுக்கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன் பாதீடு தயாரித்து |

| | | |
|---|---|---|
| கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | | அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம் / செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன் உரிய திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>அவ்வாறே வழிகாட்டியின் பிரகாரம் கம்பனியின் செயலாற்றல் தொடர்பாக உறுதிப்படுத்தலைப் பெற்று தேவையான சந்தர்ப்பங்களின் போது பொதுத் திறைசேரியுடன் அந்த பிரச்சனையான நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஒக்டோபர் 11 ஆந் திகதி 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தமை விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் வருடம் ஆரம்பிப்பதற்கு முன் கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதற்கு நேரொத்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 2024 சனவரி 31 ஆந் திகதி தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டதுடன் கணக்காய்வு திட்டத்தின் | அமைச்சினால் கணக்குகள் தயாரிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவி பெற்றுக் கொள்ளப்படுகின்றமையாலும், கணக்காய்வு ஐயவினாக்களை உள்ளடக்கிய கணக்காய்வுக்கு | அங்கரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் அந்த அறிக்கைகளை |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 24 கணக்காய்வுத் துறைகளை மேவுகை செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 08 திட்டங்கள் அளவு மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய குறித்துரைத்த ரீதியில் இனங்காணப்பட்ட செயற்பாடுகளில் 66 சதவீதம் உரிய காலப் பகுதியின் போது நிறைவேற்றப்படவில்லை. | உரிய சகல கடமைகளும் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றமையாலும், கணக்காய்வுத் திட்டத்திற்கு உரிய அநேகமான நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது. மேலும் ஊழியர் பற்றாக்குறையும் இதற்கு தாக்கமளித்து இருந்ததுடன் எதிர்காலத்தில் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டியின் கட்டளையின் IV இன் 4 (ஆ) பிரிவின் கீழான விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக அதன் 3 ஆவது பிரிவின் பிரகாரம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரமும் கணக்காய்வுத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை பரீட்சித்தல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 01 மாத்திரம் 2024 ஆகஸ்ட் 22 ஆந் திகதி நடாத்தப்பட்டமையால் செயல் முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு முடியாது இருந்தது. | 2024 பெப்ரவரி மாதம் முதல் குழுவிற்காக போதியளவில் அங்கத்தவர்கள் காணப்படாமையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்துவதற்கு முடியாது இருந்தது. எனினும் போதியளவான அங்கத்தவர் காணப்படாது இருந்த 2024 செப்தெம்பர் 03 ஆந் திகதி குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. இது வரையிலும் பணிப்பாளர் சபை இல்லாதிருந்தமையால் 04 ஆவது காலாண்டுக்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு முடியாது இருந்தது. 2025 ஆம் ஆண்டிற்குரிய 2025 மே 09 மற்றும் 2025 மே 12 என்ற 02 நாட்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தில் காணப்பட்ட நிதி நெருக்கடியின் காரணமாக 03 ஆவது காலாண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்த முடியாது இருந்தது. நான்காவது காலாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2025 நவம்பர் 18 ஆந் திகதி நடாத்துவதற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் அதன் மூலம் உள்ளகக்கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கும் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |